


# பைரவியை உங்கள் இல்லம் கொண்டு செல்லுங்கள்

யந்த்ர சேவா மூலம் வாழ்வை வளமாக்குங்கள்



தெய்வீக பெண்தன்மையின் உச்சமாக விளங்கும் லிங்கபைரவி - சத்குரு அவர்களால் பிராணப் பிரதிஷ்டை மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டவள் - ஒரு சாதாரண கல் கடவுள் தன்மையாக சக்தியூட்டப்படும் அபூர்வ செயல்முறையே பிராணப் பிரதிஷ்டை.

உக்கிரமும், அளவற்ற கருணையும் ஒருசேர அமைந்தவள் நம் தேவி.

உடல்நலம், பொருள் வளம், ஆன்மபலம் என தன் பக்தர்களுக்கு அனைத்து நன்மைகளையும் தாய்மையுடன் அருள்பவள் லிங்கபைரவி தேவி.

முழுமையான பக்தியுடன், அர்ப்பணிப்பு உள்ளத்துடன் பைரவி தேவியை அணுகுவதே, அவளது சக்திகளை உள்வாங்குவதற்கு மிகச்சிறந்த வழி.

பைரவியின் அருள்கடாட்சம் தங்கள் இல்லத்தில் நிலை பெறும்படி, தாங்கள் வாழும் இடத்தை சக்தியூட்ட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு, சத்குரு அவர்கள் சக்திமிக்க யந்த்ர சேவாவை வழங்குகிறார்.

‘சத்குருவுடன் யந்த்ரா வைபவம்’ - சத்குருவுடன் நேரடியாக பங்கேற்கும் நிகழ்ச்சி - இந்த அபூர்வமான வாய்ப்பின் போது, உங்களுக்கென தனிப்பட்ட யந்திரமும், அதனுடன் யந்த்ர சேவாவும் சத்குருவிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். இரண்டு யந்த்ர சேவா அம்சங்கள் சத்குருவால் உருவாக்கப்பட்டிருக்கின்றன - பைரவி யந்த்ர சேவா மற்றும் அவிக்ன யந்த்ர சேவா.

# பைரவி யந்த்ர சேவா

திருமணமான தம்பதிகளுக்கு அல்லது தனி நபர்களுக்கும் சத்குரு சக்திமிக்க பைரவி யந்த்ர சேவா தீட்சையை வழங்குகிறார். இதன் மூலம் அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் வாழ்வில் ஆரோக்கியம், வெற்றி, வளம் ஆகியவை ஓர் இயல்பான விளைவாக அமைந்திடும்.

இது 2500 சதுர அடி வரை அமைந்திருக்கும் இல்லங்களுக்கு உகந்ததாக இருக்கும்.

நிகழ்ச்சிக்கான கட்டணம்: ரூபாய் 4,93,000

*இது தவிர யந்திரம் தனியாக வாங்கப்பட வேண்டும்.

பைரவி யந்திரத்தின் எடை: 30 கிலோ, அளவு: 19” x 15” x 5”.



“தேவி யந்திரம் எண்ணற்ற வழிகளில் என்னில் தாக்கம் ஏற்படுத்தியுள்ளது. இப்போது தேவி என்பவள் ஒரு கருத்தியலோ, தத்துவமோ, சிந்தனையோ அல்லது நம்பிக்கையோ அல்ல - அவள் ஒரு அனுபவம். என் உடல், மனம், உணர்ச்சிகள், சக்தி ஆகியவை இன்று இத்தகைய நிலையில் இருப்பது, தேவியால் மட்டும்தான் நிகழ்ந்துள்ளது."

- ஃபோர்டு பலேஸ், பிலிப்பைன்ஸ்





# அவிக்ன யந்த்ர சேவா

“அவிக்ன” என்றால் “தடைகளை நீக்குவது” என்று அர்த்தம். திருமணமான தம்பதிகளுக்கு, தனிநபர்களுக்கு மற்றும் தொழில் பங்காளிகளுக்காகவும் சத்குரு சக்திமிக்க அவிக்ன யந்த்ர சேவா தீட்சையை வழங்குகிறார். தேவியின் அருளால் உயவுத் தன்மையுடன் இலகுவாக நீங்கள் செயல்படுவதற்கு இந்த சேவா உதவுகிறது. தனிப்பட்ட அளவிலும், தொழிலிலும், ஆன்மீக நிலையிலும் நீங்கள் உங்களது முழுத்திறனுடன் சிறப்பாக இயங்கிட உதவுகிறது.

இது 2500 சதுர அடிக்கு மேல் அமைந்திருக்கும் இல்லங்களுக்கும், அலுவலகத்திற்கும் உகந்ததாக இருக்கும். (2500 சதுர அடிக்கு குறைவாக அமைந்த இல்லங்களில் இருப்பவர்களும் கலந்துகொள்ளலாம்.)

நிகழ்ச்சிக் கட்டணம்: ரூபாய் 7,93,000
* இது தவிர யந்திரம் தனியாக வாங்கப்பட வேண்டும்

அவிக்ன யந்திர எடை: 150 கிலோ, அளவு: 36” x 30” x 8”



கஷ்டமான சூழ்நிலைகளில் கூட அனைத்தும் சாதகமாக அழகாக நிகழ்கின்றன. தேவியுடன் கூடவே விலைமதிப்பற்ற அமைதியும் சந்தோஷமும் உடன் வந்திருக்கிறது. எங்கள் வீட்டிற்கு வரும் மற்றவர்கள் கூட தேவியின் சக்தியை தவறவிடுவதில்லை, அவர்களும் அவளை உணர முடிகிறது.

**- கல்பனா மணியார், ஹெட் - பிசினஸ் சொல்யூஷன்ஸ், எடேல்வெய்ஸ் கேப்பிட்டல் லிமிடெட், மும்பை**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

## பைரவி யந்த்ர சேவாவுக்கு யார் பதிவு செய்துகொள்ளலாம்?

- பைரவி யந்த்ர சேவாவுக்கு தனிநபர்கள் அல்லது திருமணமான தம்பதிகள் பதிவு செய்து கொள்ளலாம். திருமணமான தம்பதியாக இருந்தால் யந்த்ரா வைபவத்தில் ஒன்றாக கலந்து கொள்ளலாம்.
- வைபவத்தில் கலந்து கொண்ட பிறகு ஒருவர் திருமணம் செய்து கொண்டால், அவரது தம்பதியும் யந்த்ரா வைபவத்தில் கற்றுக் கொடுக்கப்பட்ட உள்ளங்கை சடங்கை தினமும் செய்யலாம். (திருமணம் ஆகி மூன்று மாதங்களுக்குப் பிறகு செய்யலாம்). இதற்கான வழிகாட்டுதலுக்கு, யந்த்ரா வைபவ குழுவினரை தொடர்புகொள்ள வேண்டும்.
- திருமணமான தம்பதிகளாக இருந்தால், இருவரும் சேர்ந்து யந்த்ரா வைபவத்தில் கலந்துகொள்வதே சிறந்தது. அது முடியாத பட்சத்தில், ஒருவர் கலந்து கொள்ளலாம்.
- தம்பதிகளில் ஒருவர் இறந்து போயிருந்தால், அவர் (70 வயதுக்கு மேல்) தன்னுடைய மகன் அல்லது மகளுடன் சேர்ந்து வைபவத்தில் கலந்துகொள்ளலாம், (மகன் அல்லது மகளுக்கு திருமணம் ஆகாத பட்சத்தில் மட்டும்). மகன் அல்லது மகளுக்கு திருமணமாகி இருக்கும் பட்சத்தில், அவர் மட்டும் தனியாக கலந்துகொள்வது நல்லது, ஏனென்றால் திருமணத்திற்குப் பின் அவரது மனைவி (அல்லது கணவன்) தினசரி சடங்கில் பங்கேற்க முடியும்.
- யந்த்ரா வைபவத்தில் கலந்துகொண்ட இருவர் மட்டுமே அங்கு கற்றுக் கொடுக்கப்பட்ட உள்ளங்கை சடங்கை செய்யவும், யந்திரத்தைத் தொடவும் முடியும். இல்லத்தில் உள்ள மற்றவர்களும், வீட்டிற்கு வருபவர்களும் தேவியின் அருளில் அமரலாம், யந்த்ர அறையில் தேவிக்கு அர்ப்பணங்கள், அச்சல அர்ப்பணம் செய்யலாம், மற்ற பயிற்சிகளையும் செய்யலாம்.

## அவிக்ன யந்த்ர சேவாவுக்கு யார் பதிவு செய்துகொள்ளலாம்?

- அவிக்ன யந்த்ர சேவாவுக்கு தனிநபர்கள் அல்லது திருமணமான தம்பதிகள், அல்லது ஏதேனும் இரண்டு தொழில் பங்காளிகள் பதிவுசெய்து கொள்ளலாம். இருவராக இருந்தால் யந்த்ரா வைபவத்தில் ஒன்றாக கலந்து கொள்ளலாம். பிசினஸ் பார்ட்னர்களில் ஒருவர் ஆணாகவும் இன்னொருவர் பெண்ணாகவும் இருந்தால், இருவரில் ஒருவர்தான் வைபவத்தில் பங்கேற்க முடியும். இருப்பினும், பிசினஸ் பார்ட்னர்கள் அனைவருக்கும் தேவியின் இருப்பில் அருட்பயன்கள் கிடைத்திடும்.

- பிசினஸ் பார்ட்னர்கள் இருவருமே ஆணாக அல்லது பெண்ணாக இருந்தால், இருவருமே யந்த்ர சேவாவில் தீட்சை பெற்றுக்கொள்ள முடியும். அந்த இருவருமே யந்த்ரா வைபவத்தில் கலந்துகொள்வது அவசியம்.

- பிசினஸ் பார்ட்னர்கள் அனைவருக்கும் தேவியின் அருளால் பலன்கள் கிடைத்திடும், ஆனால் யந்த்ர சேவாவில் தீட்சை பெற்ற அந்த இருவர் மட்டுமே வைபவத்தில் கற்றுக் கொடுக்கப்பட்ட உள்ளங்கை சடங்கை தினமும் செய்யவோ, யந்திரத்தை தொடவோ முடியும்.

- திருமணமான தம்பதிகளாக இருந்தால், இருவரும் சேர்ந்து யந்த்ரா வைபவத்தில் கலந்துகொள்வதே சிறந்தது. அது முடியாத பட்சத்தில், ஒருவர் கலந்து கொள்ளலாம்

- தம்பதிகளில் ஒருவர் இறந்து போயிருந்தால், அவர் (70 வயதுக்கு மேல்) தன்னுடைய மகன் அல்லது மகளுடன் சேர்ந்து வைபவத்தில் கலந்து கொள்ளலாம், (மகன் அல்லது மகளுக்கு திருமணமாகாத பட்சத்தில் மட்டும்). மகன் அல்லது மகளுக்கு திருமணமாகி இருக்கும் பட்சத்தில், அவர் மட்டும் தனியாக கலந்துகொள்வது நல்லது, ஏனென்றால் திருமணத்திற்குப் பின் அவரது மனைவி (அல்லது கணவன்) தினசரி சடங்கில் பங்கேற்க முடியும்.

- யந்த்ரா வைபவத்தில் கலந்துகொண்ட இருவர் மட்டுமே அங்கு கற்றுக் கொடுக்கப்பட்ட உள்ளங்கை சடங்கை செய்யவோ, யந்திரத்தை தொடவோ முடியும். இல்லத்தில் உள்ள மற்றவர்களும், வீட்டிற்கு வருபவர்களும் தேவியின் அருளில் அமரலாம், யந்த்ர அறையில் தேவிக்கு அர்ப்பணங்கள் செய்யலாம், அச்சல அர்ப்பணம் செய்யலாம், மற்ற பயிற்சிகளையும் செய்யலாம்.

## யந்த்ர அறையை எப்படி அமைக்க வேண்டும்?

தேவிக்காக பிரத்யேகமாக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் இடமாக, யந்த்ர சேவாவுக்கென அமைக்கப்பட்ட தனி அறையாக இருப்பது மிகவும் சிறந்தது.

அவ்வளவு இடம் இல்லாத பட்சத்தில், தேவிக்கான இடத்தை உங்களது லிவிங் ரூமில் அல்லது படுக்கையறையில் அமைத்துக்கொள்ளலாம். ஆனால், தேவிக்கான இடத்திலிருந்து 10 அடி தூரத்திற்குள் சாப்பிடுவது, அருந்துவது, தூங்குவது என்று எதுவும் இருக்கக்கூடாது.

இந்த சூழலை உருவாக்க முடியாத பட்சத்தில், ஒரு பெட்டியைப் போன்ற அல்லது நான்கு பக்கமும் அடைக்கப்பட்ட தேவி சன்னதியை அமைக்கலாம். உங்கள் தினசரி சடங்கை செய்யும் போதும், மற்ற நேரங்களிலும் அந்த இடத்தை திறந்து வைத்திருக்கலாம். ஆனால், இந்த சன்னதியிலிருந்து 10 அடி தூரத்திற்குள் சாப்பிடுவது, அருந்துவது அல்லது தூங்குவது என இருந்தால் யந்திராவை மூடி வைத்திருக்க வேண்டும். இந்த பெட்டியை மரம் அல்லது உலோகத்தால் அமைக்கலாம், செயற்கையான சிந்தடிக் பொருட்களை பயன்படுத்த வேண்டாம்.

ஒரு தடுப்பு அல்லது திரையை வைத்து அந்த இடத்தை தனியாகவும் பிரிக்கலாம். தினமும் சில மணி நேரங்களுக்கு, குறிப்பாக யந்த்ர சேவா செய்யும் நேரத்தில் திரையைத் திறந்து வைத்திருப்பது சிறந்தது. இங்கிருந்து 10 அடி தூரத்திற்குள் சாப்பிடும் போது, அருந்தும் போது அல்லது தூங்கும் நேரத்தில், அதை மூடி வைத்திருக்க வேண்டும்.

இந்த இடத்தின் சூழலை தூய்மையாக வைத்திருந்து அதன் புனிதத்தை பராமரிப்பது மிகவும் அவசியம்.

நீங்கள் விரும்பினால், இந்த இடத்தில் லிங்கபைரவி குடி, தியானலிங்க யந்திரம், சத்குரு சன்னதி அல்லது நீங்கள் வைத்திருக்கக்கூடிய மற்ற தெய்வ உருவங்களை வைத்துக்கொள்ளலாம்.

யந்த்ராவை எந்த திசையிலும் அமைத்துக் கொள்ளலாம், சூரிய ஒளி நேரடியாக யந்த்ராவின் மேல் ஒருபோதும் விழாதபடி பார்த்துக்கொள்வது அவசியம்.





## தினமும் செய்ய வேண்டிய செயல்முறைகள், சடங்கு அல்லது சேவா என்ன?

நீங்கள் யந்த்ரா வைபவத்தில் கலந்துகொள்ளும் போது, உங்களுக்கு சத்குருவிடம் இருந்து ஒரு சக்திமிக்க தீட்சை வழங்கப்படும். 11 நிமிடங்களுக்கு செய்யும் இந்த புனிதமான செயல்முறையை, தீட்சை பெற்ற இருவருமே தினமும் தனித்தனியாக செய்ய வேண்டும். இருவரில் ஒருவர் வெளியூர் போய் இருந்தால் தவிர, இருவரும் தினமும் இதை செய்ய வேண்டும்.

மேலும், உங்களது தேவி சன்னதியில் தினமும் குறைந்தது 20 நிமிடங்களாவது நீங்கள் இருப்பது அவசியம்.

தினசரி செயல்முறையை நீங்கள் பகலிலும் இரவிலும் எந்த நேரத்திலும் செய்யலாம். இதை செய்வதற்கு காலி வயிறு நிலை அவசியமில்லை. இருந்தாலும், இந்நேரத்தில் வயிறு லேசாக இருக்கும்படி வைத்திருப்பது சிறந்தது.



## பௌர்ணமி அன்று செய்யும் அர்ப்பணங்கள் என்ன?

ஒவ்வொரு பௌர்ணமி அன்றும், உங்களின் 11 நிமிட செயல்முறையை செய்வதற்கு முன் அல்லது அதை செய்தபின், ஒரு தேங்காய் அல்லது பழுத்த எலுமிச்சை பழத்தை தேவிக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

விரும்பினால் இதே அர்ப்பணத்தை அமாவாசை அன்றும் நீங்கள் செய்யலாம். குறிப்பாக பயம், இழப்பு, துக்கம் போன்ற உணர்வுகளில் இருப்பவர்களுக்கு இது பயனளிக்கும்.

மேலும் இந்த அர்ப்பணத்தை, அல்லது நீங்கள் விரும்பும் எந்த அர்ப்பணமாக இருந்தாலும், மாதத்தின் எந்த நாளிலும் அதை தேவிக்கு அர்ப்பணம் செய்யலாம். இனிப்புகள், பூக்கள், நெய் தீபம், வெற்றிலை பாக்கு, அரிசி, எள் ஆகியவை பாரம்பரியமான அர்ப்பணங்களில் சில.



## மாதவிலக்கு நாட்களில் தினசரி சடங்கை செய்யலாமா?

ஆம், செய்யலாம். அதுபோன்ற தடைகள் எதுவும் இல்லை.

## என்னுடைய யோகப் பயிற்சிகளை தேவியின் சன்னதியில் செய்யலாமா?

ஆம், செய்யலாம். தேவியின் சக்திமிக்க சூழலில் பயிற்சிகளை செய்வது பலன்மிக்கதாக இருக்கும்.

## யந்த்ர சேவாவை தினமும் செய்ய வேண்டுமா?

ஆம், நீங்கள் சேவாவை தினமும் செய்ய வேண்டும். இருவரில் ஒருவர் வீட்டில் இல்லாதபோது, மற்றொருவர் தினமும் சடங்கை செய்ய வேண்டும்.

சத்குருவிடம் சேவாவிற்கான தீட்சை பெற்ற இருவர் மட்டுமே தினசரி உள்ளங்கை சடங்கை செய்யலாம். நீங்கள் இல்லாத நேரத்தில் மற்றவர்கள் தினமும் விளக்கு ஏற்றுவது, தேவிக்கு அர்ப்பணம் செய்வது ஆகியவற்றை மட்டும் செய்யலாம். தினசரி செயல்முறையை செய்யக்கூடிய அந்த இருவரைத் தவிர வேறு யாருமே யந்திரத்தை தொடக்கூடாது, இது மிகவும் முக்கியமானது.



## நான் இடம் மாறும் பட்சத்தில் யந்த்ர சேவா இடத்தை எப்படி அமைப்பது?

மிகவும் இன்றியமையாத, அத்தியாவசியமான நேரத்தில் மட்டும் உங்களது சேவா இடத்தை நகர்த்தலாம் அல்லது மாற்றியமைக்கலாம். உங்களின் புது வீட்டில் அல்லது அலுவலகத்தில் தேவிக்கான இடத்தை அமைக்கும் முன், அதற்கான இடத்தை தீர்மானமாக நிர்ணயித்துவிடுங்கள். பிறகு வேறு எந்தக் காரணத்திற்காகவும் அந்த இடத்தை மாற்ற வேண்டாம்.

## நாம் இறந்த பிறகு என்ன ஆகும்?

யந்த்ர சேவாவை ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு வழங்க முடியும். தீட்சை பெற்ற தனிநபர் அல்லது தம்பதியர் காலமான பிறகு மட்டுமே இதை செய்ய முடியும். யந்த்ர சேவாவை யாருக்கு வழங்க வேண்டும் என்று, உங்களது குழந்தைகளில் அல்லது உடன்பிறப்புகளில் ஒருவரை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும், நீங்கள் காலமான பிறகு, உங்களது உடன்பிறப்பு, மகன் அல்லது மகள் அவர்களில் ஒருவர் நமது யந்த்ரா வைபவக் குழுவை தொடர்புகொள்ள வேண்டும், அவர்களுக்கு குறிப்புகள் வழங்கப்படும். குறிப்புகள் வழங்கப்படும் வரை, அவர்கள் இந்த செயல்முறையை செய்யக்கூடாது, யந்திரத்தின் செம்புப் பகுதியை தொடவும் கூடாது. மேலும் அவர்கள் உங்களுக்காக காலபைரவ கர்மா செய்யவேண்டியது அவசியம்.

உங்களுக்கு குழந்தைகளோ உடன்பிறப்புகளோ இல்லாத பட்சத்தில், அல்லது அவர்கள் யந்த்ர சேவாவைப் பெற விரும்பாத பட்சத்தில், யந்த்ரா வைபவக் குழுவை தொடர்புகொள்ளுங்கள்.

+91 8448 447708 | yantra.ceremony@lingabhairavi.org| lingabhairavi.org



பக்தியில் அவளை நாடிடுங்கள்
பரிவின் சமுத்திரம் அவளே

வீழ்ச்சியில் அவளை நாடிடுங்கள்
விழுத்துணை என்றும் அவளே

தீவிர விருப்பத்தில் நாடிடுங்கள்
ஈர்த்திடும் கருணையும் அவளே

குழப்பத்தில் அவளை நாடிடுங்கள்
தெளிவைத் தருபவள் அவளே

ஜெய் பைரவி தேவி

அன்பும் அருளும்

**சத்குரு**

YouTube: LingaBhairavi | Facebook: Linga.Bhairavi | Instagram: linga.bhairavi